பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 16] சென்னை: ஆவணி 11 (26—8—68) திங்கள் ★ வெளியூர்: ஆவணி 12 (27—8—68) செவ்வாய் [இதழ்: 61

திருக்குறள் ஆராய்ச்சிப் பிரிவு

குடியரசுத் தலைவர் துவக்கி வைப்பார்

அண்ணாமலைநகர், ஆக. 26—குடியரசுத் தலைவர் டாக்டர் ஜாகிர் உசேன் அவர்கள், செப்டம்பர் 8-ம் நாளன்று அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில், திருக்குறள் ஆராய்ச்சிப் பிரிவு ஒன்றைத் துவக்கிவைப்பார்.

தமிழக முதலமைச்சர் அண்ணா அவர்கள், விழாவிற்குத் தலைமை தாங்குவார்.

உச்சவரம்புச் சட்டம் மிச்சவரம்பான கதை

'வெறும் காகித திட்டம்' என அமெரிக்க நிபுணர்கள் வழங்கிய 'நற்சான்று'!

சட்டமன்றத்தில் அமைச்சர் மதியழகன் விளக்கம்

சென்னை, ஆக. 26—

காங்கிரசு ஆட்சிக்காலத்தில், 'நிலச் சீர்திருத்தம்' என்ற பெயரால் கொண்டுவரப்பட்ட நில உச்சவரம்புச் சட்டம் எப்படி மிச்சவரம்புச் சட்டமாகியிருக்கிறது என்பதை வருவாய்த்துறை அமைச்சர் திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள், இன்று சட்டமன்றத்தில் கேட்கப்பட்ட துணைக்கேள்விகட்குப் பதிலளிக்கையில் விளக்கினார்.

நில உச்சவரம்புச் சட்டம் எப்படிச் செயல்படுத்தப்பட்டிருக்கிறது என்பதை, அமெரிக்காவிலிருந்து வந்திருந்த நிபுணர்கள் நேரில் கண்டு கருத்தறிவிக்கையில், 'இது வெறும் காகிதச் சட்டமாகவே இருக்கிறது' என்று கூறியிருப்பதையும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

முன்னாள் காங்கிரசு ஆட்சி, 'விதிவிலக்கு' என்னும் பேரால்---மேய்ச்சல் காடு' தென்னந்தோப்பு முதலியவற்றிற்கு விதிவிலக்களித்து மிகச் சாமர்த்தியமாகச் சட்டம் இயற்றிவிட்டது என்றும், அவர்கள் இயற்றிய சட்டப்படி எல்லாம் ஒழுங்காகவே இருப்பதாகத் தோன்றுகிறது என்றும் அமைச்சர் கூறினார்.

முன்னாள் அமைச்சர் பழையக்கோட்டை பட்டக்காரருக்கு 12,000 ஏக்கர் நிலம் இன்னும் சொந்தமாக இருப்பதாகச் சொல்லப்பட்டாலும், அவர் இன்னும் தம்மை ஓர் ஏழை விவசாயி என்றே சொல்லிக்கொள்கிறார் என்றும், தனியே சந்தித்துப் பேசிக்கொண்டிருக்கையில் அவர், தமக்கு 30 ஏக்கர் நிலமும், தமது மனைவிக்கு 30 ஏக்கர் நிலமும்தான் சொந்தமாக இருக்கிறது என்று கூறினார் என்றும் அமைச்சர் சொன்னார்.

'விதிவிலக்கு' என்ற பெயராலும், வேறு வகையிலும், பெரும் நிலம் படைத்தவர்கள் முன்கூட்டியே பாதுகாப்புத் தேடிக்கொண்டார்கள் என்பதை அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

சட்டம் இயற்றப்பட்டபோதே, 'விதிவிலக்குக் கூடாது' என்று தி. மு. கழகம் எதிர்ப்புத் தெரிவித்தது என்றும், ஆனால் அந்தக் குரலுக்கு அப்போது போதிய வலிவு இல்லாததால், அது மதிக்கப்படவில்லை என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

கழக உறுப்பினர் திரு. எஸ். இராமச்சந்திரன் கேட்ட முதல் கேள்விக்கு அமைச்சர் கே. ஏ. மதியழகன் விடையளிக்கையில், 1961-ம் ஆண்டு நிலச் சீர்திருத்தச் சட்டத்தின்கீழ் மொத்தம் 25,147 ஏக்கர் நிலம்தான் மிச்சப்பட்டது என்றும், அதில் தடை ஆணைக்குள்ளான 6,230 ஏக்கர் நிலம் போக 18,917 ஏக்கர் நிலம் அரசு கைவசம் உள்ளது என்றும், அதில் 17,765 ஏக்கர் நிலம் பயிரிடுவதற்குக் குத்தகைக்குத் தரப்பட்டுள்ளது என்றும், குத்தகை மூலம் சென்ற ஆண்டுக்கு முந்திய ஆண்டு ரூ. 17 இலட்சம் கிடைத்தது என்றும், சென்ற ஆண்டுக் கணக்கு இன்னும் கிடைக்கவில்லை என்றும் கூறினார்.

இந்த நிலத்தைப் பட்டா செய்து கொடுப்பதற்கான ஏற்பாடுகளும் நடந்துவருவதாக அமைச்சர் அறிவித்தார்.

அலுமினியத் தொழிற்சாலையைத் தனியாரிடம் ஒப்படைத்தது ஏன்?

மத்திய அரசின் யோசனைப்படியே நடந்ததாக அமைச்சர் விளக்கம்

சென்னை, ஆக. 26—

மேட்டூர் அலுமினியத் தொழிற்சாலை முதலில் அரசுத் துறையில்தான் தொடங்கப்பட்டது என்றும், மத்திய அரசின் யோசனைக்கேற்ப அது தனியார் துறைக்கு விடப்பட்டது என்றும், தொழிலமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் இன்று சட்டமன்றத்தில் கழக உறுப்பினர் எஸ். இராமச்சந்திரன் கேள்விக்கு விடையளிக்கையில் கூறினார்.

மேலும் துணைக் கேள்விகட்குப் பதிலளிக்கையில் அமைச்சர் கூறியதாவது :—

"நிதிப் பற்றுக்குறையின் காரணமாகத்தான் தனியார் துறைக்கு விடப்பட்டது; கோவை வெங்கடசாமி நாயுடுவை அணுகி இந்தத் தொழிற்சாலையைத் துவக்கும்படிக் கேட்டுக்கொள்ளப்பட்டது. அதற்கு, மத்திய அரசின் எம் ஐ.சி. நிறுவனத்தின் மூலம் ரூ. 1½-கோடி கடனாகக் கொடுக்கப்பட்டது. அவர் மற்றும் பலரையும் சேர்த்துக்கொண்டு தொழிற்சாலையைத் தொடங்கினார். அவர் எவ்வளவு முதல் போட்டார் என்ற விவரம் இப்போது கையில் இல்லை. தனியாகக் கேட்டால் விவரம் தருகிறேன்.

"தமிழக அரசு 50 பங்குகளை மட்டும் எடுத்துக்கொண்டுள்ளது; அதாவது, ரூ. 5,000 முதல் போட்டிருக்கிறது. டைரக்டராக வரவேண்டும் என்றால், குறைந்தது 50 பங்குகள் எடுத்துக்கொள்ள வேண்டும் என்றிருக்கிறது. அதன் காரணமாகவே இந்தக் குறைந்த அளவு பங்கை எடுத்துக்கொண்டது.

"மேலும் மின்சாரம், தண்ணீர் ஆகியவைகளைக் குறைந்த கட்டணத்துக்குக் கொடுக்கவும், பாக்சைட்டை அவர்கட்குக் குத்தகைக்கு விடவும் ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டது. மேலும் அவர்கள் மின்சார --- தண்ணீர்க் கட்டணச் சலுகைகள் வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள்."

இந்தித் திணிப்பு--ஏனையோருக்கு நிரந்தரமான அநீதி

கல்வியில் அரசியல்வாதிகள் தலையீடு கூடாது

மத்திய அரசுக்கு சட்டர்ஜி அறிவுரை

கல்கத்தா, ஆக. 25—

"அரசியல்வாதிகள், பழமையை மாற்றியமைப்பது என்பதன் பேரால் புதிய கொள்கைகளைத் திணித்துப் புதியதோர் தத்துவத்தை உருவாக்கும் பொருட்டுப் பொறுப்பற்ற தன்மையிலும், கட்டுப்பாடின்றியும் செயல்பட்டு வருவதே, நாட்டின் இன்றைய கல்வித் துறையில் ஏறபட்டிருக்கும் குழப்பங்களுக்கெல்லாம் அடிப்படையான காரணங்களாகும்"

என்று மனித இயல் தத்துவப் பேராசிரியரும், மொழி வல்லுநருமான டாக்டர் சுனித் குமார் சட்டர்ஜி, கல்கத்தா பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாப் பேருரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

தமது உரையில் அவர் மேலும் தெரிவித்த கருத்துக்களின் சுருக்கம் வருமாறு :—

"இந்த நிலைமைக்கு இன்றைய இளைஞர் சமுதாயத்தை நான் குறைகூறமாட்டேன். சூழ்நிலைதான் அவர்களை இந்தப் பயனற்ற நிலைமைக்கு ஆளாக்கியிருக்கிறது.

இன்றைய மாணவர்கட்கு முறையான கல்வி கிடைப்பதில்லை; இதற்குக் காரணம், அரசியல் வாதிகளின் போலித்தனமான 'முற்போக்கு'க் கொள்கைகளே யாகும்.

அரசியல் கட்சிகள் தங்களது கேவலமான அரசியல் இலாபத்தைக் கருதி, கவர்ச்சிகரமான முழக்கங்களாலும், அரைகுறையான உண்மையைச் சொல்லியும் மாணவர்கட்குத் தவறான வழிகளைக் காட்டுகின்றன; இதனால் அவர்கள் தயவுதாட்சண்யமற்றவர்களாகவோ, தவறிழைப்பவர்களாகவோ ஆகிவருகின்றனர்.

இதற்கெல்லாம் மேலாக, அரசின் அமைப்புகளால் -- குறிப்பாக மொழி விஷயத்தில் -- கல்வியும், கல்வி முறையும் மாணவர்மீது கட்டாயமாகத் திணிக்கப்படுகின்றன.

ஆங்கிலம், பள்ளிகளில் கட்டாய பாடமாகவே நீடிக்கப்பட வேண்டும்.

மத்திய அரசு இந்தியைத் திணிக்கும்போது, கட்டாய இந்தி, இந்தி பேசாத பகுதிகளின் கல்வித் துறையில் குழப்பத்தை உண்டாக்கிவருவதும், அரசியல் வாழ்வில் வேற்றுமையை உண்டாக்கி வருவதுமான உண்மையைக் கவனிக்காமலிருக்க முடியாது.

அறிவாளர்கட்கு, இன்னமும் ஆங்கிலம் ஒரு சக்திமிக்க --- பொதுவான மொழியாகவே யுள்ளது. நாட்டை சனநாயக வழிக்கு இட்டுச் சென்றவர்கள் இவர்கள்தான் என்பதை நாம் மறக்கலாகாது.

எனவே, ஓர் சிறு பகுதியினர் இந்தி பேசுகிறார்கள் என்பதாலேயே—அண்மைக்கால நூற்றுண்டுகளில் இந்தியாவின் அறிவுத் துறைக்கோ, விஞ்ஞான முன்னேற்றத்துக்கோ இவர்களது சாதனை குறிப்பிட்டுச் சொல்ல ஒன்றுமில்லை என்பதைக் கருத்தில் கொண்டு—'வெறும் உணர்ச்சிக்கு மட்டும் கட்டுப்பட்டு, தேசிய வாழ்வுக்குப் பயன்தரக் கூடியதும், நன்மை பயககக் கூடியதுமானவைகளை அழிக்கத் துணை போகாதீர்' என்று நான் மத்திய அரசை மனமுவந்து கேட்டுக்கொள்கிறேன்.

இந்தியை மட்டும் ஆட்சிமொழியாக்கி, குறிப்பிட்ட ஒரு மொழி பேசுவோருக்கு மட்டும் சாதகம் செய்வது, ஏனைய மொழி பேசுவோருக்கு அநீதியை நிரந்தரமாக நிலை நிறுத்துவதாகும்.

அனைத்திந்தியத் தேர்வுகளை ஆங்கிலத்திலேயே—ஆங்கிலத்தில்

(1-ம் பத்தி பார்க்க)

(5-ம் பத்தித் தொடர்ச்சி)

மட்டுமே—நீடித்து நடத்த வேண்டும்.

கட்சி அரசியலை ஒதுக்கிவைத்து, மதிப்புக்குரிய கல்வியாளர்களுடையவும், சிந்தனையாளர்களுடையவும் அறிவுரைகள்மீது நாம் கவனம் செலுத்த வேண்டும்.

எந்தக் கொள்கையும், நடவடிக்கையும் தொலை நோக்குடனும், உண்மை நிலையை உணர்ந்தும் உருவாக்கிய சிந்தனையையே வழிகாட்டியாகக் கொள்ள வேண்டும்.

மிகவும் அக்கறையுடன் கவனிக்கப்பட வேண்டியவர்களின் கருத்துக்களையும் நடவடிக்கைகளையும் பொருட்படுத்தாது, வெறும் அரசியல்வாதிகள் என்பதாலேயே அவர்களின் கருத்துக்களில் நாம் ஏன் அதிக அக்கறை காட்டுகிறோம் என்பதையும் சிந்திக்க வேண்டும்.

ஒவ்வொரு மாநிலத்துக்கும், மொழிவாரிப் பகுதிகளுக்கும், அதற்கென்று தனித் தனிப் பிரச்சினைகள் இருக்கும்போது, கல்வி முறையை மத்தியமயப்படுத்துவது நன்மைபயப்பது தானா என்பதையும் நாம் தீவிரமாக ஆராய்ந்துபார்க்க வேண்டும்."

இலண்டன், ஆக. 26—

பிரிட்டனில் பணியாற்றும் மக்களில் 10 சதவிகிதத்தினர் முதுகு வலியினால் வேதனைப்படுகின்றனராம்! அதனால், 50 இலட்சம் வேலை நாட்கள் இழப்புக்குள்ளாகின்றனவாம்!

பொருள் இழப்பு பெரிதன்று!

கொடுமை ஒழிந்ததுதான் முக்கியம்

மக்கள் பெற்ற மன நிம்மதி கோடி பெறும்

மதுவிலக்கை அமுல் நடத்துவதில் தமிழக அரசு உறுதி -- முதலமைச்சர் அண்ணா திட்டவட்ட அறிவிப்பு

சென்னை, ஆக. 24—

" தமிழகத்தில் மதுவிலக்கை முழுவதுமாக அமுலாக்குவதற்குத் தமிழக அரசு, தன்னால் இயன்றதையெல்லாம் செய்யும்; அவசியமானால், இதற்காகத் தனிக் குழு ஒன்று அமைக்கவும் தயாராக இருக்கிறது.

" மதுவிலக்கு அமுலில் உள்ள கோளாறுகளையும் குறைபாடுகளையும் கூறி, மதுவிலக்குத் திட்டத்தை நீக்கிவிடக் கோருவது சரியான வாதமல்ல; 'மதுவிலக்கை முழு அளவில் நிறைவேற்ற வேண்டும்' என்பதே நம் குறிக்கோளாகும்; சில குறைபாடுகளுக்காக மதுவிலக்கைக் கைவிட்டுவிட வேண்டுமென்பது சரியல்ல — முறையல்ல — அது எங்கள் நோக்கமுமல்ல!

" மதுவிலக்கினால் ஏற்படும் பொருள் இழப்பு முக்கியமல்ல; எந்த அளவுக்குப் பண்பாட்டைப் பெற்றிருக்கிறோம் என்பதுதான் முக்கியம்; வீதிகளிலும் வீடுகளிலும் குடிவெறியினால் ஏற்பட்ட சண்டை சச்சரவுகளையும், மக்கள் பட்ட அவதியையும் நாம் கண்டிருக்கிறோம் — நம் நினைவிலும் இருக்கிறது; அந்தக் கொடுமை இப்போது ஒழிந்துவிட்டது; எனவே, பொருள் நட்டத்தைப் பார்ப்பது பொருத்தமற்றது; மக்கள் பெற்றுள்ள மன நிம்மதியே பெரிய செல்வம் — அது கோடி பெறும்"

இவ்வாறு முதலமைச்சர் அண்ணா அவர்கள், சட்டமன்றத்தில், மதுவிலக்குப்பற்றிக் கேட்கப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் தெள்ளத் தெளிவுற விளக்கினார்.

"மதுவிலக்கைத் தமிழகம் முழு அளவில் அமுலாக்குவதால் ஏற்படும் நட்டத்தைச் சரி செய்யும் அளவுக்குத் தமிழகத்திற்கு அதிக நிதி ஒதுக்கச் செய்ய வேண்டும் என்று மத்திய அரசிடம் மாநில அரசு வற்புறுத்தவில்லை"

என்று கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் முதலமைச்சர் தெரிவித்தார்.

"ஏன் இவ்வாறு வற்புறுத்தவில்லை?" என்று கேட்கப்பட்டபோது முதலமைச்சர் அண்ணா அவர்கள் விளக்கியதாவது:—

"இதுபற்றி மத்திய அரசுடன் விவாதிக்கப்பட்டுவிட்டது; 'தமிழகத்தில் மதுவிலக்கால் ஏற்பட்ட இழப்பு, வேறு வரிகள் மூலம் சரிக்கட்டப்பட்டுவிட்டதால் நட்ட ஈடு எதுவும் தருவதற்கில்லை' என்று கூறப்பட்டுவிட்டது.

"துணைத் தலைமையமைச்சர் மொரார்ஜி தேசாய், 'மதுவிலக்கை அமுல் நடத்தும் மாநிலங்களுக்கு ஓரளவு நட்ட ஈடு தரப்படும்' எனக் கூறியிருக்கிறார்; 'அப்படியானால், தமிழக அரசுக்கும் அந்த நிதியுதவி ஏற்பாடு பொருந்துமா?' என்று கேட்டபோது, 'தமிழகத்திற்குப் பொருந்தாது; புதிதாக மதுவிலக்கை அமுல் செய்யும் மாநிலங்களுக்கே அது பொருந்தும்' என்று கூறிவிட்டார்.

"இப்படிக் கூறியிருப்பதைப் பார்த்தால், செப்டம்பரில் நாம் மதுவிலக்கை ரத்து செய்துவிட்டு, அக்டோபர் அல்லது நவம்பரில் மதுவிலக்கை மீண்டும் நாம் அமுலாக்கினால், மத்திய அரசிடமிருந்து நட்டு ஈடு பெற--மத்திய அரசின் கொள்கை இடமளிக்கிறது; அப்போது ஒருவேளை மொரார்ஜி தேசாய் பண உதவி தருவாரோ என்னவோ?

"ஆனால் நான், இந்த இரண்டு மாத காலத்திற்குக்கூட அந்தப் பாவத்தைச் செய்யத் தயாராக இல்லை--அந்த முறையைப் பின்பற்றப் போவதும் இல்லை."

குடும்பக் கட்டுப்பாடு பற்றிய திரைப் படம்

சென்னை, ஆக. 24—

"குடும்பக் கட்டுப்பாடு சம்பந்தமாகத் திரைப் படம் தயாரிக்கும் திட்டம், அரசின் பரிசீலனையில் இருக்கிறது"

என்று சட்டமன்ற மேலவையில், கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில், நலத்துறை அமைச்சர் எஸ். ஜே. சாதிக் பாட்சா கூறினார்.

"நடிகர்களில் எவரெவர் இலவசமாக நடிக்கிறார்கள்? கதை–வசனம்–டைரக்ஷன் பொறுப்பு யார்?" என்று கேட்கப்பட்டபோது, 'இப்போது இக்கேள்வி எழுவதற்கு இடமில்லை' என்று அமைச்சர் குறிப்பிட்டார்.

அனைத்துக்கும் அணுசக்தி!

அண்டவெளி முதல் அடுப்பங்கரை வரையிலான எல்லா அலுவல்களுக்கும் அணுசக்தியைப் பயன்படுத்தும் காலம் விரைவில் வரவிருக்கிறதாம்!

எதிர்காலத்தில் அணுசக்தி மிகவும் மலிவானதாகவும், மின்சாரம், நீராவி ஆகியவற்றைக் காட்டிலும் பன்மடங்கு அதிகமாக பயன்படுத்தப்படுவதாகவும், இருக்குமாம். இதேபோல் லாசர் விண்வெளிக் கதிரும் அன்றாட அலுவல்களுக்குப் பயன்பட ஆரம்பித்துவிடுமாம்.

இத்தகவல்களை ஜெர்மன் கூட்டாட்சிக் குடியரசிலுள்ள முனிச் நகரப் பேராசிரியர் ஒருவர் தெரிவித்திருக்கிறார்.

இந்தி எதிர்ப்பு வழக்குகள்

சென்னை, ஆக. 25—

"1967 டிசம்பர், 1968 சனவரி மாதங்களில் இந்தி எதிர்ப்புக்காக மதுரை மாவட்டத்தில் ஏழு வழக்குகளும், தஞ்சை மாவட்டத்தில் இரு வழக்குகளும், சேலம் மாவட்டத்தில் இரு வழக்குகளும், திருநெல்வேலி மாவட்டத்தில் ஒரு வழக்கும் பதிவு செய்யப்பட்டன"

என்று முதலமைச்சர் அண்ணா அவர்கள் சட்டமன்ற மேலவையில், கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் கூறினார்.

"இந்த வழக்குகளில் குற்றஞ் சாட்டப்பட்டவர்களை நிர்ணயிக்க முடியாத காரணத்தினால், எந்த வழக்கும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை" என்றும் அவர் கூறினார்.

'மாநில அரசின் யோசனையை மத்திய அரசு ஏற்கவில்லை'

அமைச்சர் மதியழகன் தகவல்

சென்னை, ஆக. 24—

"வெளி மாநிலங்களுக்கு வெல்லம் கொண்டு செல்வதற்குத் தடையேதும் இப்போது இல்லை; 'தடை விதிக்க வேண்டும்' என்று மாநில அரசு கூறிய யோசனையை, மத்திய அரசு ஏற்கவில்லை"

என்று சட்டமன்ற மேலவையில், வருவாய்த் துறை அமைச்சர் கே. ஏ. மதியழகன் அவர்கள், கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

சிறிதளவும் குறைவின்றித் தண்ணீர் வழங்கப்படும்

மைசூர் அரசு தந்த உறுதி

அமைச்சர் கருணாநிதி தகவல்

சென்னை, ஆக. 24—

"காவிரி நீர் பற்றிய 1924-ம் ஆண்டு ஒப்பந்தப்படி, தமிழகத்திற்கு உரித்தான தண்ணீர்ப் போக்கு அளவைச் சிறிதேனும் குறைவின்றித் தொடர்ந்து காவிரி ஆற்றில் வழங்குவதற்கு மைசூர் அரசு உறுதியளித்திருக்கிறது.

"உறுதிமொழியை நிறைவேற்றும் வகையில், விதிமுறைகள் -- செயல் முறை --- நிர்வாக நடைமுறை ஏற்பாடுகள் ஆகியவை பற்றி விரிவான முறையிம் விவாதங்கள் நடைபெற்றன"

என்ற விவரங்கள், பொதுப் பணித் துறை அமைச்சர் மு. கருணாநிதி அவர்கள் சட்டமன்றத்தில் அளித்த அறிக்கை ஒன்றில் கூறப்பட்டிருக்கின்றன.

குறைந்தபட்ச ஊதியச் சட்டத்தின் கீழ் வந்த நிறுவனங்கள் பற்றித் தகவல்

புதுடில்லி, ஆக. 24—

இந்த ஆண்டில், குறைந்தபட்ச ஊழியச சட்டத்தின்கீழ் வந்த நிறுவனங்கள் 24,625; தொழிலாளர்கள் 9,12,429.

முந்திய ஆண்டில் 23,937 நிறுவனங்கள் வந்தன; 8,92,879 தொழிலாளர்கள் வந்தனர்.

இந்த ஆண்டில் 7,811 நிறுவனங்கள் அறிக்கை அனுப்பின; அவை கொடுத்த மொத்த ஊதியம் ரூ. 14,53,26,985.

முந்திய ஆண்டில் அறிக்கை அனுப்பிய 7,549 நிறுவனங்கள் மொத்தம் ரூ. 12,72,57,346 வழங்கின. முந்திய ஆண்டைப்போலவே இந்த ஆண்டிலும் மலைத் தோட்டங்கள் அதிகப் பணம் வழங்கியுள்ளன.

தொழிலாளர் நலம், மற்றும் தொழிற்சாலைத்துறை அலுவலர்கள் இந்த ஆண்டில் 11,208 தொழில் நிறுவனங்களைச் சோதனையிட்டனர். 65 நிறுவனங்களின் மீது வழக்குத் தொடரப்பட்டன; அவற்றில் 61 நிறுவனங்களுக்கு ரூ. 1,835·60 அபராதம் விதிக்கப்பட்டது.

மும்மொழித் திட்டத்துக்குத்தடை!

கல்கத்தா உயர் நீதிமன்றம் நோட்டீசு

கல்கத்தா, ஆக. 28—

1967 டிச. 16-ல் மக்கள் சபை நிறைவேற்றிய மொழி பற்றிய தீர்மானத்தையும், மும்மொழித் திட்டத்தையும் செயல்படுத்தத் தடை விதித்து ஏன் உத்திரவு பிறப்பிக்கக் கூடாது என்பதற்கும், அவற்றை ஏன் ரத்து செய்யக் கூடாது என்பதற்கும் காரணம் காட்டுமாறு மத்திய அரசுக்கும் (உள்துறை, கல்வி அமைச்சகங்கள்), மேற்கு வங்க அரசுக்கும், கல்கத்தா நீதிமன்றத்தில் நீதிபதி எஸ். சி. கோஷ் நோட்டீசு பிறப்பித்தார்.

"'ஆட்சி மொழி' திருத்தச் சட்டமும், மும்மொழித் திட்டமும் செல்லாது" என்று கூறி கல்கத்தா இரவீந்திர பாரதி, சமஸ்கிருதப் பேராசிரியர் தியானேஷ் நாராயண சக்கரவர்த்தி சார்பில் மனு ஒன்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது.

மும்மொழித் திட்டத்தின் விளைவாக சமஸ்கிருத மொழியின் படிப்பு--வளர்ச்சி--பரப்புதல் ஆகியவை புறக்கணிக்கப்படுவதாகவும், அரசியல் சட்டத்தின் பல்வேறு விதிகளுக்கு இது முரணானது என்றும் மனு கூறியது.

இலங்கையிலிருந்து தாயகம் திரும்பும் தமிழர்களுக்கு வேலை வாய்ப்பு

அவரவர்களுக்குப் பழக்கமான தொழில்களில் ஈடுபடுத்தவே முயற்சிக்கப்படுகிறது

அந்தமானில் குடியேற்றவும் திட்டம் --- சட்டமன்றத்தில் முதலமைச்சர் அண்ணா விளக்கம்

சென்னை, ஆக. 24—

" இலங்கையிலிருந்து தாயகம் திரும்பும் தமிழர்களில், பல தொழில்களிலும் ஈடுபட்டவர்கள் உள்ளனர்; தோட்டத் தொழில், விவசாயம், பனைமரத் தொழில், சிறு சிறு கடைகள் வைத்து நடத்துதல் ஆகிய பல்வேறு தொழில்களில் ஈடுபட்டு அனுபவப்பட்டவர்கள் இருக்கின்றனர். இயன்றவரையில், அவரவர்களுக்குப் பழக்கமான தொழில்களில் ஈடுபடுத்தவே முயற்சி எடுத்துக்கொள்ளப்படுகிறது; அதற்கு வாய்ப்பு இல்லாமலிருக்குமானால் மாற்று வேலை தரப்படும்.

" தாயகம் திரும்புவோருக்கு மறுவாழ்வு அளிப்பதற்கான பணிகளைக் கவனிப்பதற்காக, 'மறுவாழ்வு இயக்குநர்' ஒருவரை அரசு நியமித்திருக்கிறது; தமது அலுவல்களுடன் அவர், இலங்கையிலிருந்து திரும்புபவர்களை -- நிலக் குடியேற்றத் திட்டங்களின்கீழ் --- பல்வேறு மாவட்டங்களில் குடியமர்த்துவதற்கான வழிவகைகளை ஆராய்ந்துவருகிறார்.

" அந்தமான் தீவில் பத்தாயிரம் முதல் பதினெட்டாயிரம் ஏக்கர் வரை நிலங்கள், இலங்கையிலிருந்து திரும்புபவர்களுக்கு ஒதுக்கப்படும் வாய்ப்பு இருக்கிறது"

என்று முதலமைச்சர் அண்ணா அவர்கள், சட்டமன்றத்தில், கேட்கப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் விளக்கித் தெரிவித்தார்.

கேள்வி:—"அந்தமானில் குடியமர்த்துவதற்கான திட்டம் பற்றி என்னென்ன செய்யப்பட்டுள்ளது?"

முதலமைச்சர்:—"நமது அரசு சார்பில் அதிகாரி ஒருவரை அந்தமான் தீவுக்கு அனுப்பி வைத்தோம்; அங்கு இலங்கைத் தமிழர்களைக் குடியமர்த்துவது பற்றிய வாய்ப்புகளை அவர் கண்டறிந்து வந்தார். விவசாயத்துக்குரிய நிலம் இருப்பதையும் அவர் தெரிந்து வந்திருக்கிறார். இது பற்றிய விவரம் டெல்லிக்கு அனுப்பப்பட்டிருக்கிறது; ஆகவே, அந்தமானில் குடியமர்த்தும் நமது திட்டத்திற்கு மத்திய அரசின் அனுமதி கிடைக்குமென்று நம்புகிறேன்."

கேள்வி:— "இலங்கையிலிருந்து இதுவரை எவ்வளவு பேர் வந்திருக்கிறார்கள்?"

முதலமைச்சர்:— "சாஸ்திரி—பண்டாரநாயகா ஒப்பந்தப்படி இதுவரை யாரும் வரவில்லை. முதல் பிரிவு அக்டோபர் மாதத்தில் வரும்."

கேள்வி:— "இலங்கையிலிருந்து வருபவர்களில் எந்த மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் அதிகம் இருக்கிறார்கள்?"

முதலமைச்சர்:— "இதுபற்றிச் சொல்லவேண்டிய அவசியமில்லை. இலங்கைக்கு அடுத்தாற்போலுள்ள மாநிலத்தைச் சேர்ந்தவர்கள்தான் அதிகம் பேர் இருக்கிறார்கள்."

கேள்வி:—"இராமநாதபுரம் மாவட்டக் கலெக்டர் அங்கு இலங்கைத் தமிழர்களைக் குடியமர்த்த 14 அம்ச திட்ட மொஅறை அனுப்பியிருக்கிறாரே ---அது பற்றி அரசு கவனிக்குமா?"

முதலமைச்சர்:—"எல்லா மாவட்டக் கலெக்டருமே குடியமர்த்துவதற்கான திட்டங்களை அனுப்பியிருக்கிறார்கள்; இவையெல்லாம் அரசின் பரிசீலனையில் இருக்கின்றன."

கேள்வி:— "இலங்கையிலிருந்து வருபவர்களில் பெரும்பாலோர் நெல்லை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள்; எனவே, இங்கு ஒரு நூற்பாலையையும், தேயிலைத் தோட்டத்தையும் அமைக்க அரசு முன்வருமா?"

முதலமைச்சர்:— "நூற்பாலை பற்றிச் சிந்திப்பதற்குமுன், இப்போது நூற்பாலை பற்றி ஏற்பட்டுள்ள சிக்கல் பற்றியும் உறுப்பினர் நினைவுபடுத்திக் கொள்வது நல்லது."

ஹண்டே:—"இலங்கையிலிருந்து வரும் அகதிகளுக்கு காலதாமதமின்றி சிவப்புநாடா முறையையெல்லாம் பின்பற்றாமல் வேண்டிய தேவைகளை உடனடியாகச் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதா?"

முதலமைச்சர்:— "இதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. அகதிகள் முகாம்களில் தனி அதிகாரிகள் இருக்கிறார்கள்; அவர்கள், அகதிகளின் தேவைகளை உடனுக்குடன் கவனிப்பார்கள்."

பீர் முகம்மது:—"ஏற்கனவே தமிழகத்திற்குத் திரும்பியுள்ள இலங்கை அகதிகளுக்கு இந்தப் புதிய வசதிகளெல்லாம் தரப்பட்டுள்ளனவா?"

முதலமைச்சர்:—"இதுவரையில் வந்தவர்களெல்லாம் அவர்களாகவே தம்மிச்சையாகத் திரும்பி வந்தவர்கள்; அகதிகள் மறுவாழ்வளிப்புத் திட்டங்களின்கீழ் அவர்களும் இனி பயன் பெறுவர்."

மலேசிய இந்தியருக்கும் ஆபத்து

குடியுரிமை பெருதவர் வெளியேற்றப்படலாம்

வேலை செய்வதற்கும் அனுமதி பெற்ருக வேண்டும்

கோலாலம்பூர், ஆக. 62—

பர்மா, இலங்கை ஆகிய நாடுகளில் வாழ்ந்துவந்த இந்திய மரபினருக்கு நெருக்கடி ஏற்பட்டு --- இன்னும் அது தணியாத நிலையிலேயே --- இப்போது மலேசியாவாழ் இந்திய மரபினருக்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளது.

மலேசியாவில் வேலை பார்க்கும் மலேசியக் குடிமக்களல்லாத சுமார் 3.5 இலட்சம் பேர்களும் தங்கள் பெயர்களைப் பதிவுசெய்து கொள்ளுமாறு கட்டாயப்படுத்தச் சட்டம் இயற்றுவது என்று மலேசிய அரசு முடிவுசெய்துள்ளது.

இந்தச் சட்டமியற்றப்பட்டால், சில பிரிவுகளைச் சேர்ந்த ஊழியர்கள், வேலைசெய்வதற்கான அனுமதி பெற்ருக வேண்டும்.

தற்போது, நாடாளுமன்றத்தில் வேலைக் கட்டுப்பாட்டு மசோதா பரிசீலனையில் இருக்கிறது. இதன்படி, நீர்வழிப் போக்குவரத்து, பொதுப் பணிகள், ஓட்டல்கள், சிற்றுண்டி விடுதிகள், தொழிற்சாலைகள், கட்டுமான வேலைசெய்பவர்கள், ஆயுதத் தொழிற்சாலைகள், பத்திரிகைத் தொழில் முதலிய பணிகளில் ஈடுபட்டுள்ளவர்கள் ஆகியோர், தாங்கள் வேலை செய்வதற்கான அனுமதியைப் (பெர்மிட்) பெற்ருக வேண்டும்.

மலேசியாவில், மலேசியக் குடிமக்களல்லாதவர்களில் இந்தியர்களே பெரும் பகுதியினர் ஆவர். இவர்களில் 1,60,000 பேர் உள்ளனர். இவர்களைத் தவிர, இந்திய மரபினர் 30,000 பேர் உள்ளனர்; அவர்களை நாடற்றவர்கள் என்று கூறப்படுகிறது.

அவர்களிடம் இந்திய பாஸ்போர்ட்டுகள் உள்ளன; 'மலேசியக் குடியுரிமை கிடைக்கும்' என்ற நம்பிக்கையில் அவர்களில் பெரும்பாலோர் இந்தியக் குடி உரிமையைத் துறந்துவிட்டனராம். இதுவரை அவர்களால் மலேசியக் குடியுரிமையைப் பெற முடியவில்லை.

இந்த மசோதாவின்படி, வேலைகள் சம்பந்தமாக ஓர் அதிகாரி நியமிக்கப்படுவார் என்றும், இரண்டாண்டுகளுக்கு ஒருமுறை வேலை பெர்மிட்டுகள் பரிசீலனை செய்யப்படும் என்றும், பெர்மிட்டுகளைத் திரும்பப் பெறும் அதிகாரம் அந்த அதிகாரிக்கு உண்டு என்றும் தொடர்புடைய துறை அதிகாரி ஒருவர் கூறினர்.

இம்மசோதா இந்தியருக்கோ, இலங்கையருக்கோ, பாகிஸ்தானியருக்கோ எதிராகக் கொண்டு வரப்படவில்லை என்றும், சிங்கப்பூரில் உள்ள மலேசியக் குடிமக்களிடம் வருங்காலத்தில் பாரபட்சம் காட்டப்படுமானல் அதைச் சமாளிப்பதற்கே இச்சட்டம் இயற்றப்படுகிறது என்றும், இதனல் சில ஆயிரம் இந்தியர்கள் பாதிக்கப்படலாம் என்றும் அந்த அதிகாரி மேலும் கூறினர்.

ஆமதாபாத் தி.மு.க. செய்திகள்

ஆமதாபாத் மத்திய தி.மு.க. பொது உறுப்பினர் கூட்டம் 16—8—68-ல், தோழர் தி. நெடுமாறன் இல்லத்தில் நடைபெற்றது; திரு. ந. முனுசாமி அவர்களை ஆணையாளராகக் கொண்டு 1968—69-ம் ஆண்டுக்கான புதிய நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்; விவரம் :—அவைத் தலைவர் : பாபுநகர் பெ. இலக்குமணன்; செயலாளர் : மணிநகர் சு. கிருட்டினன்; துணைச் செயலாளர் : நரோடா ஆர். அண்ணமலை; பொருளாளர் : சமால்பூர் ந. இராமநாதன்.

அண்ணு பிறந்த நாள் விழா

15—9—68-ல் அறிஞர் அண்ணு அவர்களின் 60-ம் ஆண்டு பிறந்த நாள் விழாவைச் சிறப்பாகக் கொண்டாடுவதெனவும், குசராத் மாநில முதல்வர் இதந்திர தேசாய் அவர்களை அழைப்பதெனவும் முடிவு செய்யப்பட்டது.

துயர் துடைப்பு

குசராத் மாநிலத்தில் சூரத் மாவட்டத்தில் அண்மையில் வெள்ளத்தினுல் ஏற்பட்ட இழப்பை ஈடு செய்யும் பொருட்டு, ஆமதாபாத் பஞ்சாலைத் தொழிலாளர்கள் ஒரு நாள் ஊதியம் வழங்க வேண்டுமென முடிவு செய்த ஆமதாபாத் மஜீர் மகாஜன் சங்கத்திற்கு நன்றி தெரிவிக்கப்பட்டது.

ஆமதாபாத் தி. மு. கழகச் சார்பில் கணிசமான அளவு நிவாரண நிதி அளிப்பதென முடிவு செய்யப்பட்டது.

பாராட்டு

ஆமதாபாத்—மணிநகர் தி. மு. கழகப் பொது உறுப்பினர் கூட்டம் 16—8—68-ல், அவைத் தலைவர் அ. குப்புசாமி தலைமையில் நடைபெற்றது; கழகம் ஆற்றியுள்ள பணிகளையும் இனி செய்யவேண்டிய பணிகள் பற்றியும், மணிநகர் கிளைக் கழக உறுப்பினர் சு. கிருட்டினன் — ஆமதாபாத் தி.மு.க. பொதுக் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதற்குப் பாராட்டுத் தெரிவித்தும் தோழர்கள் புதுவை வைத்தியநாதன், ந. பாஸ்கரன், வை. ஆறுமுகம் ஆகியோர் பேசினர்.

தோழர் சு. கிருட்டினன் தமக்கு அளிக்கப்பட்ட வரவேற்புக்கு நன்றி தெரிவித்துப் பேசினர். செயலாளர் ஆ. செந்தமிழ்ச் செல்வன் நன்றி தெரிவித்தார். அனைவருக்கும் தேநீர் அளிக்கப்பட்டது.

சைதை சாரதி நகர் அண்ணு அறிவு வளர்ச்சி மன்றம்

சென்னை 97-வது வட்டம் (புதிய 118-வது வட்டம்) அண்ணு அறிவு வளர்ச்சி மன்ற உறுப்பினர் கூட்டம் 3—8—68 அன்று வட்ட தி. மு. க. செயலாளர் ஒய். எம். சேகர் தலைமையில் நடைபெற்ற போது, நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :—

தலைவர் : து. கோவில்மணி; துணைத்தலைவர் : அ. பார்த்தசாரதி; செயலாளர் : மா. சுப்பிரமணியன்; துணைச் செயலாளர் : ப. இராசகோபாலன்; பொருளாளர் : மு. மாணிக்கம்; மற்றும் 7 பேர் செயற்குழு உறுப்பினர்கள்.

பம்பாய் -- தாராவி தொல்காப்பியர் கழகம்

பம்பாய்—தாராவி தொல்காப்பியர் கழகச் சார்பில் 15—8—68 இரவு 8-மணிக்கு திரு. பி. எஸ். செல்லையா தலைமையில் கணேசர் அரங்கில் வித்துவான் பட்டம் பெற்ற ச. அழகமுத்து, ம. சூசை மாணிக்கம் ஆகியோருக்குப் பாராட்டுக் கூட்டம் நடைபெற்றது.

தோழர் எஸ். பி. சங்கர் அனைவரையும் வரவேற்றுப் பேசினர்.

தலைமையுரைக்குப் பின்னர், திருவாளர்கள் எஸ். தியாகராசன், சு. வள்ளிநாயகம், ஆரியசங்காரன், த. மு. பொற்கோ, எல். என். செழியன், சி. நா. சிதம்பரம், சேரை முகமது ஆகியோர் வாழ்த்திப் பேசினர்.

புலவர்கள் அழகுமுத்து, சூசை மாணிக்கம் இருவரும் நன்றி தெரிவித்துப் பேசிய பின், நெல்லை சு. தங்கையா நன்றி நவின்ருர்.

புலவர்கட்கு, அண்ணு படிப்பகம், சத்தியவாணிமுத்து அம்மையார் மன்றம், தோழர்கள் கடற்கரை, சந்தனராஜ் சார்பில் கைத்தறி ஆடை அணிவிக்கப்பட்டது.

பம்பாய்--குர்லாவில் அண்ணு 60-ம் ஆண்டு பிறந்த நாள் விழா

அறிஞர் அண்ணு அவர்களின் 60-ம் ஆண்டு பிறந்த நாள் விழாவை, நாடாளுமன்ற மக்களவை குழுத் தலைவர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்களைக் கொண்டு சிறந்த முறையில் பம்பாய்—குர்லா தி. மு. க. சார்பில் நடத்த ஏற்பாடுகள் நடைபெறுகிறது.

"விழாவின்போது பம்பாய் தி. மு. க. அவைத் தலைவர் எஸ். தியாகராசன் தலைமையில் மாபெரும் ஊர்வலம் நடைபெறும்" என்று வரவேற்புக் குழு அறிவிக்கிறது.

மதுரை தி. மா. மு. க.

மதுரை திராவிட மாணவர் முன்னேற்றக் கழகத்தின் அமைப்புக் கூட்டம், மதுரை மாவட்டக் கழக அலுவலகத்தில், 17—8—68 அன்று தென் மாவட்ட தி. மா. மு. க. பொறுப்பாளர் கா. காளிமுத்து பி.ஏ. தலைமையில் கூடி, கீழ்க்கண்ட புதிய அமைப்பாளரையும், செயற்குழுவினரையும் தேர்ந்தெடுத்தது :—

மதுரை மாவட்ட அமைப்பாளர் : பாலுச்சாமி; நகர அவைத் தலைவர் : வை. இளம்பரிதி; நகரச் செயலாளர் : முத்திருளாண்டி; துணைச் செயலாளர்கள் : வி. அமுதரசன், ஏ. பாண்டுரெங்கன்; பொருளாளர் : மு. கிருட்டிணன்; மற்றும் ஏழு செயற்குழு உறுப்பினர்கள்.

இந்நூற்றுண்டின் இணையற்ற உலகப் பெருங் கவிஞர்

வங்கத் தமிழர் சங்கம் கொண்டாடிய பாரதிதாசன் விழாவில் சொற்பொழிவு

கல்கத்தா—அவுராவில் இயங்கி வரும் வங்கத் தமிழர் சங்கத்தினர், 11—8—68 அன்று பாவேந்தர் பாரதிதாசன் விழாவினைச் சிறப்பாகக் கொண்டாடினர்.

சங்கப் பொருளாளர்---இசைத் தென்றல் கே. பி. கே. முத்து, 'சங்கே முழங்கு' என்ற பாவேந்தரின் பாடலைப் பாட — எஸ். பிச்சாண்டி விழாவிற்குத் தலைமை தாங்க— சங்கத் துணைத் தலைவர் அ. தர்மராசன் விழாவினைத் துவக்கிவைக்க — 'உலக மகாக் கவிகளுக்குள்ளே பாரதிதாசன்' என்ற தலைப்பில் சங்க முன்னுள் தலைவர் ஜி. இராகவனுர் சிறப்புப் பேருரை ஆற்றினர்; அவர் கூறியதாவது :—

"உலகத்தின் ஒவ்வொரு நாட்டிலுள்ள உலகை மகாக் கவிதைகளையும், காப்பியங்களையும், பாவேந்தரின் படைப்புகளையும் ஒப்பிட்டுப் பார்க்கையில், இருபதாம் நூற்றுண்டின் உலக மகாக் கவிஞர் பாரதிதாசனுர் என்பது அனைவரும் உணர்ந்ததொன்று.

உலக மகாக் கவிகளுள் எவரும், தம் தாய்மொழியைத் தம் 'உயிருக்கு நேராக'ச் சொன்னதில்லை. 'தமிழ் இனத்தின் வாழ்வும் வளமும் தம் தாய்மொழியே (தமிழ்)' என்று கூறிய பாரதிதாசனுருக்கு இணையான கவிஞர் உலகில் யாரும் இலர்.

தம் மொழியின் உயர்வுக்காக—தம் இனத்தின் வாழ்வுக்காக—இலக்கணமுறை தவருது படைக்கப்பட்ட படைப்புகள் பாரதிதாசனுரின் கவிதைகள்.

இருபதாம் நூற்றுண்டின் சிறந்த கவிஞரான பாரதிதாசனுரின் கருத்துக்களை இருபதாம் நூற்றுண்டின் சிறந்த தமிழறிஞர் தமிழக முதல்வர் அண்ணு அவர்கள் நடைமுறையில் கொண்டு வருவதோடு, தமிழகப் பள்ளிகளில் -- கல்லூரிகளில் -- தமிழ்ப் பாடப் புத்தகங்களில் பாவேந்தரின் கவிதைகள் அதிகம் இடம் பெற ஆவன செய்து, உலக மகா கவி பாவேந்தரின் சிறப்பினைக் குழந்தைப்பருவமுதலே தமிழர்கள் தெரிந்துகொள்ள ஆவன செய்வார்கள் என நம்புகிருேம்."

மற்றும் திருவாளர்கள் மு. நாராயணசாமி, நேருநாராயணன், பி. சங்கரன் ஆகியோரும், பாவேந்தர் பாரதிதாசனின் படைப்புகள் ஒவ்வொன்றையும் அயல்நாட்டுக் கவிஞர்களின் படைப்புகளுடன் ஒப்பிட்டு, தன்மொழி—தன்இனம்—தன் தாய்நாடு இவற்றிற்காக—தொழிலாளர் நலனுக்காக---இவ்வளவு உணர்ச்சியுடன் உலகில் எந்தக் கவிஞரும் பாடவில்லை என்பதனைப் பல ஆதாரங்களைச் சுட்டிக்காட்டி சிறப்புரையாற்றினர்.

பாரதிதாசனுரின் பாடல்களைப் பண்ணேடு கருப்பையா, சங்கரன் மற்றும் சேர்மாதேவி அய்யாத்துரை குழுவினர் பாடி இசையமுது படைத்தனர்.

சங்கச் செயலாளர் மு. இராமையா நன்றி நவின்ருர்.

விடுதலை நாள் விழா

கல்கத்தா—அவுராவில் இயங்கி வரும் வங்கத் தமிழர் சங்கத்தினர், சங்கப் பணிமனையில் 15—8—68ல் விடுதலை நாள் விழாவினைச் சிறப்பாகக் கொண்டாடினர்.

சங்கத் துணைத் தலைவர் அ. தர்மராசன் முன்னிலையில் திரு. எஸ். பிச்சாண்டி தேசியக் கொடியை ஏற்றிவைத்தார்.

சங்கம் நடத்தும் இலவசத் தமிழ்த் தொடக்கப்பள்ளிச் சிருர்கள், பாரதியார் — பாரதிதாசனுரின் பாடல்களைப் பாடினர்.

பள்ளிக் குழந்தைகளின் பெற்ருேர்களும், சங்க உறுப்பினர்களும் விழாவில் கலந்துகொண்டனர். அனைவருக்கும் இனிப்பு வழங்கப்பட்டது.

பாரதிதாசன் இலக்கிய மன்றத் துவக்கவிழா

தருமபுரி மாவட்டம் அதிகாரப்பட்டி அரசினர் உயர்நிலைப் பள்ளி பாவேந்தர் பாரதிதாசன் இலக்கிய மன்றத் தொடக்க விழா 7—8—68-ல் திருவள்ளுவர் திறந்தவெளியரங்கில் தலைமையாசிரியர் கொ. செங்கோடன் தலைமையில் நடைபெற்றது.

புலவர் அ. மு. கண்ணப்பன் வரவேற்ருர்; ஆசிரியர் பொ. கிருட்டினன் விழாவைத் தொடங்கி வைத்தார். பாப்பிரெட்டிப்பட்டி ஊராட்சி ஒன்றியத் தலைவர் வே. இரா. வேங்கன், பெரியார் உருவப் படத்தையும், புலவர் கு. வேங்கன் அறிஞர் அண்ணு உருவப் படத்தையும், புலவர் பெ. சிதம்பரம் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் உருவப் படத்தையும் திறந்து வைத்து அவர்தம் தொண்டுகளை விளக்கிப் பேசினர்.

திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள், பெரியார், அறிஞர் அண்ணு, புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் போன்றவர்கள் படங்கள் கட்டாயம் ஒவ்வொரு பள்ளியிலும் இடம்பெற வேண்டுமென்றும், இம்மும்மணிகளும் சமுதாய—அரசியல்—இலக்கியத் துறைகளுக்கு அரும்பணியாற்றியுள்ளனர் என்றும், அம்மேதைகளின் படங்கள் பொது நிலையங்களில் இடம் பெறுவதால் பள்ளிக்குப் பெருமையென்றும் கூறி, 'குறள்காட்டும் உவமைகள்' என்னும் பொருளில் அரியதோர் உரை நிகழ்த்தினுர்.

பேச்சு—இசை—குறள் — மனப்பாடப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர், மாணவியர்கட்கு அதிகாரப்பட்டி ஊராட்சித் தலைவர் பெ. குப்புசாமி பரிசுகள் வழங்கினர்.

புலவர் ந. பழனிச்சாமி நன்றி நவின்ருர்.

புலியகுளம் அன்பு படிப்பகம்

புலியகுளம் அன்பு படிப்பகத் தேர்தல் 9—8—68-ல் பு. மா. நஞ்சப்பன் தலைமையில் நடைபெற்ற போது, நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :—

அவைத் தலைவர் : மு. இராசகோபால்; செயலாளர் : சி. இரத்தினசாமி; துணைச் செயலாளர் : ச. அல்போன்ஸ்; பொருளாளர் : ம. ஆ. ஜார்ஜ் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் 13 பேர்.

அந்தியூர் எம். ஜி. ஆர். மன்றம்

அந்தியூர் எம். ஜி. ஆர். மன்ற நிர்வாகிகள் தேர்தல் 27—7—68 அன்று திரு. ஏ. ஆர். கோவிந்தசாமி தலைமையில் நடந்தது; கீழ்க்கண்டவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :—

செயலாளர் : தை. வெங்கடாசலம்; துணைச்செயலாளர் : ஏ. மணி; அவைத் தலைவர் : ஏ. ஆர். சுபான் : பொருளாளர் : ஏ. கே. பாலு; செயற்குழு உறுப்பினர்கள் : அ. கா. ஆறுமுகம், ஆர். பச்சியண்ணன்.

வடக்குப்பொய்கை நல்லூர் தி.மு.க. கட்டிடத் திறப்புவிழா

25—8—68 மாலை 5-மணிககு வடக்குப்பொய்கை நல்லூர் தி. மு. கழகக் கட்டிடத்தை, வீ. சு. க. விரசக்தி தலைமையில் அமைச்சர் மு. கருணநிதி அவர்கள் திறந்து வைப்பார்; மன்னை ப. நாராயணசாமி, அ. சந்தானம், அ. இராசமாணிக்கம் பி.ஏ.பி.எல், இரா. கல்யாணசுந்தரம் ஆகியோர் கலந்துகொள்வர்.

இரங்கல்

வடமதுரை தி.மு.க. உறுப்பினர் சி. பொன்னுச்சாமி 20—8—68-ல் இயற்கையெய்தியது குறித்து, வடமதுரை தி.மு.க. சார்பில் அன்னுர் குடும்பத்துக்கு அனுதாபமும் ஆறுதலும் தெரிவிக்கப்பட்டது.

அரசு அதிகாரிகள் -- ஊழியர்கள்மீது ஊழல் நடவடிக்கை

குற்றச்சாட்டுக்கள் -- அமைச்சர் தரும் தகவல்

புதுடில்லி, ஆக. 26—

"மேற்கு வங்கத்தில் 31-அரசிதழ் பதிவுபெற்ற அதிகாரிகள் உட்பட 82-ஊழியர்கள்மீது நடவடிக்கை எடுக்க, கண்காணிப்புக் குழு பரிந்துரை செய்திருக்கிறது"

என, உள்துறை அமைச்சர் சவாண், நாடாளுமன்ற மேலவையில் தெரிவித்தார்.

இக்குழு, 99-அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரிகள் உட்பட 277-ஊழியர்கள் சம்பந்தமான ஊழல் புகார்களைப் பரிசீலித்தது என்றும், சிலர்மீது இலாகாபூர்வ நடவடிக்கையும் சிலர் மீது நீதிமன்ற நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இப்புகார்கள், சட்டவிரோதமாகக் கையூட்டுப் பெறுதல்—உண்மையான தமது வருமானத்தை மிஞ்சும் அளவுக்குச் சொத்துச் சேர்த்து வைத்திருத்தல்—மற்றும் போலி வணிக நிறுவனங்களை நடத்துதல் ஆகியவைகளாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

இறக்குமதி செய்யப்பட்ட உணவுத் தானியங்களின் விநியோகத்தில் முறைகேடு நிகழ்ந்தது கண்டுபிடிக்கப்பட்டதையொட்டி நான்கு நிறுவனங்களை ஒதுக்கப்பட்ட பட்டியலில் சேர்க்குமாறு மேற்படி குழு பரிந்துரை செய்யப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினர்.

இதில் மத்திய அரசு ஊழியர்கள் சம்பந்தப்பட்ட விவரங்களைத் தெரிவிக்குமாறு கேட்டதற்கு, அமைச்சர் சவாண், முழுத் தகவலையும் தரவில்லை; ஆனல், ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரியும், ஒரு போலீசு அதிகாரியும் சம்பந்தப்பட்டிருப்பதாக மட்டும் தெரிவித்தார்.

தோல்வியின் வயிற்றெரிச்சலையே வெளிப்படுத்துகின்றனர்!

நாட்டைக் கெடுத்தவர்களா நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவருவது?

காங்கிரசாரின் உள்நோக்கம் -- தோழமைக் கட்சி உறுப்பினர்கள் சாடல்

சென்னை, ஆக. 24—

சட்டமன்றத்தில் காங்கிரசுக் கட்சியினர் கொண்டுவந்துள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது நடந்த விவாதத்தில் கலந்துகொண்டு பேசிய தோழமைக் கட்சிகளின் உறுப்பினர்கள் அனைவருமே, நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட்டதன் உள் நோக்கத்தை எடுத்துக்காட்டிச் சாடினர்.

" நாட்டைக் கெடுத்த காங்கிரசுக் கட்சியா, நியாயத்தின் வழி நின்று நடுநாயகமாக இயங்கும் கழக அரசின் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவருவது'' என்றும் அவர்கள் வினவினர்.

பி. வேலுச்சாமி

பி. சோ. கட்சி உறுப்பினர் பி. வேலுச்சாமி பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

" கடந்த 1948-ம் ஆண்டிலிருந்து 1967-வரையில் --- காங்கிரசு ஆட்சியில் --- தொழிலாளர்களுக்குக் கிடைத்த நன்மைகள் தான் என்ன? தொழிலாளர் நலனுக்கு செய்ததுதான் என்ன?

" கோவையில் 11,000-தொழிலாளர்களை வேலையிலிருந்து நீக்கியிருக்கிறார்கள்; அவர்களை நடுத்தெருவிலே நிற்க வைத்தது காங்கிரசு ஆட்சி!

" முதலாளிகளுக்குக் காங்கிரசு ஆட்சி சலுகைகள் பல வழங்கி, எதேச்சாதிகார முதலாளிகளாக மாறுவதற்கு அவர்களை ஊக்குவித்துவந்தது!

" தி. மு. கழக ஆட்சி ஏற்பட்டவுடன், தொழிலாளர்களுக்கு நன்மைகள் பல ஏற்பட்டிருக்கின்றன; தொழில் பிரச்சினையில் நடுநாயகமாக இந்த அரசு இருக்கிறது! எது நியாயமோ அதற்காகப் பாடுபடுகிறது!

" எந்தத் தொழிற்சாலைகளாக இருந்தாலும் முழு அளவில் மூலதனம் போட்டு அவைகளைத் துவங்கிய முதலாளிகள் எவருமிலர்! அரசு மானியத்தை அதிகமாகப் பெற்றுத்தான் அவைகள் துவங்கப்பட்டிருக்கின்றன!

" சிறிய அளவில் முதலீடு செய்து பெரும் அளவில் மத்திய--மாநில அரசுகளிடம் மானியமும் கடனும் பெற்றுத் தொழில் நடத்துபவர்தான் முதலாளி!

" இப்படித் தொழிற்சாலைகளை நடத்துவதால் கிடைக்கின்ற இலாபத்தை, ஊதாரித்தனமாக இவர்கள் செலவழிக்கிறார்கள்! இதனால் நாடு சீரழிந்து சின்னா பின்னமாகத்தான் போகப் போகிறது!

" இத்தகைய முறையில் நாட்டைக் கெடுத்த கட்சியைச் சார்ந்தோர் கொண்டுவந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை நான் எதிர்க்கிறேன்.''

ஏ. பாலசுப்பிரமணியம்

சட்டமன்ற இடது கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவர் ஏ. பாலசுப்பிரமணியம் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

" 1967-ல் பெற்ற தோல்வியைப் பொறுக்கமாட்டாமல் காங்கிரசுக்காரர்கள், தி.மு.க. அரசு மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்திருக்கிறார்கள். அவர்களது வயிற்றெறிச்சல் இன்னும் தீரவில்லை; அதன் காரணமாகத்தான் கழக அரசைப் பார்த்து மொரார்ஜியிலிருந்து அனைவரும் குறை கூறிக்கொண்டு திரிகிறார்கள்.

" தமிழ்நாட்டில் தொழில் மந்தம் ஏற்பட்டிருப்பதாகக் கூறுகிறார்கள்; இது யாரால் ஏற்பட்டது -- யார் இதற்குப் பொறுப்பு ஏற்க வேண்டும்?

" உலகத்திலுள்ள எல்லா நாடுகளிலும் -- எங்கெங்கு கடன் வாங்க முடியுமோ அங்கெல்லாம் வாங்கித் தொழில்களைத் துவங்கியதால், 20 ஆண்டுகளுக்குள் நெருக்கடி உருவாகி மந்தநிலை ஏற்பட்டிருக்கிறது.

" அந்நியர்கள் இங்கு செய்துள்ள முதலீட்டின் காரணமாக அவர்களுக்குப் பல வகைகளிலும் கிடைக்கும் இலாபத்தையும் கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள பொருள்களையும் எடுத்துச் சென்றுவிடுகின்றனர்; இந்த 'ஓட்டை' இருக்கும் வரையில் தொழில் மந்தமும் இருக்கத்தான் செய்யும்.

" ஆகவே, அரசியல் நோக்கத்துடன் கொண்டுவரப்பட்ட இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை முறியடிக்க வேண்டியது நம்முடைய கடமையாகும்.''

கே. போஜன்

சுதந்தரக் கட்சி உறுப்பினர் கே. போஜன் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

" ஒரு நாட்டில் முக்கியமாக மனித வாழ்க்கைக்குத் தேவையானது, உண்ண உணவு--- உடுக்க உடை---இருப்பதற்கு இடம்! . .

" தி. மு. கழகம் ஆட்சிக்கு வந்த பின், முதலில் உணவுப் பிரச்சினையில் கவனம் செலுத்தி, அதைத் தீர்த்துவைத்தது பாராட்டுக்குரியது.

" தேர்தலுக்கு முன்பு அரிசிக்காக வேகாத வெயிலில் பெண்களும் தாய்மார்களும் பங்கீட்டுக் கடைகளின் முன்பு நின்றிருந்த அவல நிலையைநாம் இன்னும் மறப்பதற்கில்லை! அந்த நிலைமை மாறி, குறைந்த விலையில் அரிசி வாங்கி மக்கள் வயிறுரச் சாப்பிடுகிறார்கள்! அதற்காக இந்த அரசை எவ்வளவு பாராட்டினாலும் தகும்!

" தொழில் துறையில் மந்தம் ஏற்பட்டுவிட்டதாகக் கூறுகிறார்கள்; இந்த நிலைமை யாரால் ஏற்பட்டது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

" உண்மையில் தமிழகத்தில் --- தொழில் துறையில் வளர்ச்சி ஏற்படவேண்டுமானால், காங்கிரசுக்காரர்களும் இத்துறையில் ஒத்துழைக்க வேண்டும்; அதை விடுத்து, அரசியல் காரணத்துக்காகக் கழக அரசின் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்திருப்பது தேவையற்றது -- அதை நிராகரிக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.''

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

27--8--68

சென்னை 34-வது வட்டம்

தி. மு. க. சார்பில் மாலை 7-மணிக்கு வாடியா நகர் பென்ஷனர்லேன் திடலில்; தலைவர் : ஏ. எஸ். பாண்டியன்; பேசுவோர் : சிட்டிபாபு எம்.பி., மு. அலங்காரம் எல்.எல்.ஏ., ஆர். டி. அரசு, அ. கரிகாலன் எம்.சி. அ. முத்தையா, மு. மாசிலாமணி, து. நடராசன் எம்.சி., கோ. லோகநாதன் எம்.சி.

அகூர்

தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு; தலைவர் : முனுசாமி; பேசுவோர் : புலவர் பொன்னிவளவன், ஆ. தங்கவேலு, வெ. முனுசாமி எம்.எல்.ஏ., எஸ். நடராசன், தி. க. குமாரசாமி, த. பூங்காவனம், திராவிடமணி.

திருவானைக்காவல்

தி.மு.க. சார்பில் மாலை 6-30 மணிக்கு மேல விபூதி பிரகாரத்தில்; தலைவர் : எஸ். சீனிவாசன்; பேசுவோர் : கேரள சுந்தரம், தஞ்சைத் தம்பி, எம். எஸ். மணி எம்.எல்.ஏ., ஆர். நாகசுந்தரம் எம்.எல்.ஏ., எம். எஸ். வெங்கடாசலம், சு. நெடுமாறன், அ. பொன்னுசாமி, கோ. விசுவநாதன், இரா. கல்யாணசுந்தரம், மற்றும் பலர்.

28--8--68

செங்கம்

நகர் தி.மு.க. சார்பில் மாலை 7 மணிக்கு சிவன் கோயில் திடலில்; தலைவர் : மண்ணுங்கட்டி; பேசுவோர் : கோ. விசுவநாதன் எம்.பி., தோப்பூர் திருவேங்கடம், தொ. கோவிந்தசாமி, சி. சின்னராசு, து. கண்ணன், சி. இராமலிங்கம், சி. அச்சுதன்.

தலைமைக் கழக அறிக்கை

சார்பு மன்றங்கள் -- துணை அமைப்புகளின் நிர்வாகிகளுக்கு அறிவிப்பு

கழகச் சட்ட திட்டம் விதி 8-ன்படி, கழகச் சார்புடைய மன்றங்கள், படிப்பகங்கள் ஆகிய துணை அமைப்புகளின் நிர்வாகிகள் பிரச்சாரக் கூட்டங்கள் நடத்துவதென்றால், சம்பந்தப்பட்ட ஊர்க் கழகக் கிளையின் (சென்னையில் வட்டக் கிளையின்) செயலாளருடைய அனுமதியைப் பெற வேண்டும். எக்காரணங்கொண்டாவது கிளையின் செயலாளர் அனுமதி தருவதற்கு மறுத்தால், சார்பு மன்றங்கள் முறையாக மேலமைப்புகளுக்கு முறையீடு செய்து முடிவு அறிந்த பின்னரே கூட்டங்கள் நடத்தும் செயல்களில் ஈடுபட வேண்டும்.

இந்த விதியை மீறி துணை மன்றங்கள் தம்மிச்சையாகக் கூட்டங்கள் நடத்துவது போன்ற செயல்களில் ஈடுபட வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறோம்.

நாடெங்கும் கழகக் கிளைகளும், சார்பு மன்றங்களும் அமையப் பெற்றிருக்கையில், 'கழக ஆதரவாளர்கள்' என்ற பெயரால் கூட்டங்களை நடத்துவது, கழகக் கட்டுக்கோப்புகளைச் சீர்குலைப்பதாகும் என்பதை எடுத்துக்காட்ட விரும்புகிறோம்.

கிளைக் கழகச் செயலாளர்களும், முறைப்படி சார்பு மன்றங்களின் வேண்டுகோளை ஏற்று உடன் அனுமதி அளித்து ஊக்குவிக்க வேண்டுகிறோம்.

'அறிவகம்', சென்னை-13
28—8—68

என். வி. நடராசன்
அமைப்புச் செயலாளர், தி.மு.க.

கழகச் சொற்பொழிவாளர்களுக்கு வேண்டுகோள்

கழகச் சட்ட திட்டம் விதி 8-ன்படி, கழகச் சார்புடைய மன்றங்கள்---படிப்பகங்கள், அந்தந்த ஊர்க் கிளையின் (சென்னையில் வட்டக் கிளை) அனுமதியைப் பெற்றே பிரசாரக் கூட்டங்களை நடத்துதல் வேண்டும். எனவே சார்பு மன்றங்கள், படிப்பகங்கள் கழகச் சொற்பொழிவாளர்களையும், இசை நிகழ்ச்சி நடத்துவோரையும் அணுகும்போது, சம்பந்தப்பட்ட அனுமதி பெறப்பட்டிருக்கிறதா என்பதை அறிந்து ஒப்புதல் அளிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

நாடெங்கும் கழகக் கிளைகளும், சார்பு மன்றங்களும் அமையப் பெற்றிருக்கையில், 'கழக ஆதரவாளர்கள்' என்ற பேரால் கழக நிகழ்ச்சிகளை நடத்துவது கழகக் கட்டுக்கோப்புக்குப் புறம்பான செயலாதலால் அவ்வித நிகழ்ச்சிகளிலும் கழகச் சொற்பொழிவாளர்கள் கலந்துகொள்ள வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறோம்.

—தலைமைக் கழகம் (தி. மு. க.

அமைச்சர் முத்துசாமி அவர்களின் மாஸ்கோ சொற்பொழிவு

வானொலியில் ஒலிபரப்பாகும்

அண்மையில் சோவியத் ருஷ்யாவுக்குச் சென்றுவந்த அமைச்சர் திரு. மா. முத்துசாமி அவர்கள் மாஸ்கோவில் நிகழ்த்திய சொற்பொழிவு 28—8—68 இரவு 7-30 மணிக்கு அகில இந்திய ரேடியோவில் ஒலிபரப்பாகிறது.

சொற்பொழிவை 17, 25-ஆகிய அலை வரிசைகளில் கேட்கலாம்.

இந்தியை வளர்க்க அரசியல் சட்டத் திருத்தமாம்

நாடாளுமன்றத்தில் தனி நபர் மசோதா

புதுடில்லி, ஆக. 24—

'ஆட்சி மொழி' என்ற முறையில் வளரச் செய்யக் கோரும் தனி நபர் மசோதா நாடாளுமன்ற மேலவையில் தாக்கல் செய்யப்பட்டது.

" இந்தி ஒரு வட்டார மொழியாக இருப்பது வேறு; அதுவே ஆட்சி மொழியாக இருப்பது வேறு'' என்ற அடிப்படையில் இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது.

இந்த மசோதாவைத் தாக்கல் செய்த திரு. எஸ். கே. வைஷம்பாயன் (காங்) 'இந்தி தொடர்பு மொழியாக வளரவேண்டுமானால் அது எளிதையாகவும், பொதுவாக எல்லோருக்கும் புரிவதாகவும் இருக்கவேண்டும்' என்று கூறினார்.

இதற்காக, 'அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டும்' என்று இம்மசோதா கோருகிறது.

கழகத் தேர்தல்

ஒசூர் வட்டம்

25—8—68 அன்று ஒசூர் பயணிகள் விடுதியில், தருமபுரி மாவட்டம ஒசூர் வட்ட அவைத் தலைவர், துணைச் செயலாளர், மற்றும் இரண்டு பிரதிநிதிகளுக்கான தேர்தல், தோழர் கே. எம். கண்ணபிரான் அவர்களை ஆணையாளராகக் கொண்டு நடைபெற்றது.

தேர்ந்தெடுக்கப்பட்ட தோழர்களின் விவரம் :—

அவைத் தலைவர் :
ஆர். எம். இராமசாமி,
நம்மாண்டஅள்ளி

துணைச் செயலாளர் :
வி. என். பிரசன்னன்,
தேன்கனிகோட்டை

மாவட்டப் பிரதிநிதிகள் :
பி. பி. கோவிந்தராசன்,
பஞ்சபள்ளி
எம். பெரியண்ணன்,
பஞ்சபள்ளி

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

குழுக் கூட்டம்

" சென்னை 95-வது வட்ட தி. மு. கழக பொது உறுப்பினர் கூட்டம், 28—8—68 இரவு 9-மணிக்கு கிளைக் கழகப் பணிமனையில் நடைபெறும்'' என்று செயலாளர் ஆதி நாராயணன் அறிவிக்கிறார்.

அண்ணா குறுக்கீடே சுவையூட்டியது!

நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் புதுமையில்லை!

" நம்பிக்கையில்லாத் தீர்மானம் என்பது, ஆளும் கட்சி மக்கள் கண்களுக்கு மதிப்புக் குறைந்ததாகத் தோன்றச் செய்ய எதிர்க் கட்சியினருக்குக் கிடைத்துள்ள ஒரு சக்திவாய்ந்த ஆயுதமாகும். அது, நன்கு சிந்தித்துச் சரியான நேரத்தில் கொண்டுவரப்பட்டதாக இருக்கவேண்டும்.

" இது உண்மையிலேயே பலனளிக்கக் கூடியதாக இருக்க வேண்டுமானால், பொதுமக்களிடையே ஆர்வத்தை ஏற்படுத்தி - - அவையிலுள்ள கட்சிகளின் ஆதரவையும் பெறக்கூடியதாக இருக்கவேண்டும். அப்போதுதான் அதிகாரத்திலுள்ள கட்சி, நிலைமையை உணருவதற்குத் தலைப்பட்டு, தன் கொள்கைகளைப் பற்றி மறுபரிசிலனை செய்யும்.

" எதிர்க் கட்சியினரின் 11 அம்ச குற்றச்சாட்டுக்களையும், அதன் மீது கடந்த இரண்டு நாட்களாக நடந்த விவாதங்களையும் கேட்ட யாருக்கும் சுவாரசியமற்ற உணர்ச்சிதான் ஏற்பட்டிருக்கும்; குற்றச்சாட்டுக்களிலோ, அதற்கு ஆதரவான விவாதங்களிலோ புதுமையேயில்லை என்பதுதான் இதற்குக் காரணம். எனவே, விவாதம் உணர்ச்சியை ஏற்படுத்துவதாக இல்லை.

" எனினும் முதலமைச்சர் அண்ணாதுரை அவர்கள், காங்கிரசு உறுப்பினர்கள் பேசும் போதெல்லாம் அடிக்கடிக் குறுக்கிட்டுப் பேசியது விவாதத்தைச் சுவையுள்ளதாக்கியது.''

—'சட்டமன்றத்தில் கடந்த வாரம்' என்ற 'மெயில்' (25—8—68) இதழின் கட்டுரையிலிருந்து.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அறிவி அச்சகத்தில் (24, [illegible] செட்டித் தெரு, சென்னை-18) [illegible]